8th November 1965]

(b) if so, the extent of damages caused; and

(c) whether there is any proposal to re-construct the damaged building and the estimated cost thereof?

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR : (a) Yes.

(b) The extent of damage to the building with furniture is estimated at Rs. 1,26,500. The loss on account of destruction of records cannot be estimated in terms of money.

(c) Yes. The estimated cost is Rs. 1,12,000.

திருக்கோயிலூர் சப்-ஜெயில்

** 355 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோயிலூர் சப்-ஜெயிலில் சிறையாளிகளை அடைக்கும் அறையின் தரையில் தார் பூசப்பட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. கோ. பூவராகன் : *ஆம்.*

திரு. எம். எஸ். மணி : *திருக்கோயிலூர் சப்-ஜெயிலில் தரையில் தார் பூசப்பட்டிருக்கிற இடத்தில் படுப்பதால் உஷ்ணம் ஏற்பட்டு அதன் காரணமாக நோய் ஏற்படுகிறது என்பது உண்மையா? அந்த நிலையைப் போக்க அரசாங்கம் மாற்று முறைகளைக் கையாள முன்வருமா?*

கனம் திரு. கோ. பூவராகன் : *தாரைச் சுரண்டிவிட்டு சிமெண்ட் போடுவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.*

Forged Contingent Bills

* 356 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) whether the Government are aware of the fact that two contingent bills of the Stationery and Printing Department to the value of Rs. 66,000 have been forged during April-May, 1961; and

(b) if so, the action taken thereon ?

கனம் திரு. கோ. பூவராகன் : *(அ) ஆம்.*

(இ) தஞ்சாவூர் மாவட்டக் கருவூலத்தில் இந்தப் போலிப் பட்டியை அனுமதித்ததற்காக அக்கருவூ அதிகாரி, கணக்கர், தலைமைப் பொருளாளர் ஆகியோர் பொறுப்பாளிகளாக்கப்பட்டுள்ளனர். கருவூல அதிகாரி இப்பொழுது ஓய்வு பெற்றுவிட்டார். அவர் மீது நடவடிக்கை தொடங்கப்பட்டுவிட்டது. நிர்ணய நடைமுறைகளைப் பின்பற்றி இறுதி உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். மற்ற இரு அதிகாரிகள் சம்பந்தமாக, துறையளவில் நடவடிக்கைகளை முடிக்க விரைவாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

[8th November 1965

இராமநாதபுரம் மாவட்டக் கருவூலத்தில் இம்மாதிரியான போலிப்பட்டி ஒன்றை அனுமதித்ததற்காக, அதன் கருவூல அதிகாரி (இவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்), பொருளாளர், ஓர் எழுத்தர் ஆகியோரும் மதுரை மாவட்டக் கருவூலத்தில் ஓர் எழுத்தரும் பொறுப்பாளிகளாக்கப்பட்டுள்ளனர். கருவூல அதிகாரியின் மாதாந்தர பென்ஷன் தொகையில் ரூ. 10 குறைக்கப்பட்டது. மதுரை மாவட்டக் கருவூலத்தைச் சேர்ந்த எழுத்தருக்கு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட ஏனையோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்தக் குறைபாடுகள் ஏற்படுவதற்குக் காரணம், தாலுக்கா ஆபீசில் வேலை செய்கின்றவர்கள் ரிட்டையர் ஆகின்ற சமயம் பார்த்து அந்த கஜானாவிற்கு அதிகாரிகளாகப் போடப்படுவதுதான். அவர்களுக்குச் சொத்து இல்லாத நிலையில், அவர்கள் இப்படி ஐம்பதாயிரம், அறுபதாயிரம் ரூபாய்க்கும் அதிகமாக மோசடி பில்களைத் தயாரித்துப் பணத்தை எங்காவது அனுப்பிவிட்டு, அவர்களும் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால், கஜானாவில் போடப்படுகிற அதிகாரிகள், ரிட்டையராக ஐந்து வருஷங்கள் மட்டுமே இருக்கும்போது அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படக் கூடாது என்ற அளவில் அரசாங்கம் ஆணையிடுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இவ்வாறு நடந்ததைக் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு நான் பதில் அளித்தேன். கனம் அங்கத்தினர் இப்பொழுது போடுகிற கேள்வியை சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சருக்குப் போட்டால், அவர்கள் பதில் அளிப்பார்கள்.

திரு. செ. மாதவன் : இராமனுதபுரம் மாவட்டத்திலுள்ள கருவூலத்தில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? அதில் எப்படி எப்படிக் கையாடல் செய்யப்பட்டது ? ஓய்வு பெற்ற அதிகாரியாக இருந்தால், அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. கோ. பூவராகன் : இராமனுதபுரம் மாவட்டக் கருவூலத்தில் ரூ. 28,050-க்குப் போலிப் பட்டி தயார் செய்தார்கள். அதன் காரணமாக, கருவூல அதிகாரி, பொருளாளர், எழுத்தர்கள் ஆகியோர் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஓய்வு பெற்ற கருவூல அதிகாரியின் மாதாந்தர பென்ஷன் தொகையில் பத்து ரூபாய் குறைக்கப்பட்டது. ஒரு எழுத்தருக்கு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட ஏனையோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தென்னுற்காடு மாவட்டத்தில் சுற்றுலா விடுதிகள்

* 357 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டத்தில் டூரிஸ்ட் சென்டர்கள் (Tourist Centres) கட்டவேண்டுமென்று அண்மையில் கோரிக்கை ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா?